குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No. 395/2020**

வழக்கு சாட்சி எ.ம.சா.1

2026ம் **ஜூன்** மாதம் 24–ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**(Accused present).**

நாள்: 24.06.2026

**குறுக்கு விசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் மசா.1 ஆவணம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 05.12.2019 தேதி கொடுக்கப்பட்டது. மேற்கண்ட புகார் ஆனது பாலச்சந்தர் என்பவர் தமிழ்ச்செல்வன் என்பவர் மீது கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட புகாரை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட புகாரியில் கோபிநாத் என்பவர் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. பாலச்சந்திரன் என்பவர் தமிழ்ச்செல்வன் என்பவர் மீது தொழில் செய்ததில் அவர் எனக்கு ரூபாய் 49 லட்சம் பணம் தர வேண்டும் என்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பொதுவாக பணம் கொடுத்தல் வாங்கல் புகாரை நாங்கள் காவல் நிலையத்தில் விசாரணை செய்ய மாட்டோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு புகார் கொடுத்தாலும் நாங்கள் சி எஸ் ஆர் பதிவு செய்து மனு ரசீது கொடுப்போம் என்று சொன்னால் சரிதான். சிவில் சம்பந்தமான வழக்குகள் வந்தால் நீதிமன்றத்தில் சென்று தீர்த்துக் கொள்ளுமாறு அவர்களிடம் சொல்லி அனுப்பி விடுவோம் என்று சொன்னால் சரிதான். ம.சா.1 ஆவணத்தில் இருவரும் சமாதானமாக சென்றுவிட்டது குறித்து எதுவும் எழுது வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார் எவ்வாறு சமரசமானார்கள் என்பது குறித்து எந்த தகவலும் எங்களுக்கு தெரியாது அதற்கான ஆவணங்களும் எங்களிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். காசோலையின் 771448 மற்றும் 771449 காசோலைகள் சம்பந்தப்பட்ட விவரங்களும் அவரிடம் இருந்து காசோலை பெற்று கொடுக்கப்பட்டதா அவ்வாறு வழக்கு சமரசமாக முடிந்ததா என்ற விபரம் எங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் அது சம்பந்தமான ஆவணங்களும் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். இந்த புகாரை பொருத்தவரை கோபிநாத் என்பவருக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்தப் புகாருக்கும் இந்த வழக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் நான் கொடுக்கக்கூடிய சாட்சியம் இந்த வழக்குக்கு சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை**

பணம் பரிவர்த்தனைதவிர இரண்டு காசோலைகளை எடுத்து வைத்துக்கொண்டு கொடுக்க மறுத்தார் என்று சிஎஸ்ஆர்ல் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையம் பழைய காவல் நிலையத்தில் இருந்து புதிய காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டதால் சம்பந்தப்பட்ட சமரச ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும் என்று சொல்லியுள்ளேன். பழைய காவல் நிலையத்தில் இருந்து புதிய காவல் நிலையத்திற்கு மாற்றப்படும்போது சிஎஸ்ஆர் ரிஸிஸ்டர்ல் யார் யாருடன் சமரசம் ஆனார்கள் என்ற விபரம் இருக்கும் அதனை தாக்கல் செய்ய முடியுமா என்றால் பழைய காவல் நிலையம் சென்று தேடி பார்த்தபோது சம்பந்தப்பட்ட ஆவணம் கிடைக்கவில்லை. சிஎஸ்ஆர் ரிஸிஸ்டர் பாதுகாக்கவேண்டிய பொருப்பானவர் யார் என்றால் கஜா புயல் காரணமாக ஆவணங்கள் துழைந்துவிட்டது. காவல்நிலையம் சேதம் அடைந்துவிட்டு ஆவணங்கள் கிடைக்கவில்லை. கஜா புயலில் ஆவணங்கள் துழைந்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் துழைந்து போனது குறித்து காவல் நிலையத்தில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.